# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Ceylon
P M G No, H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - கூக] யாழ்ப்பாணம்:- கரவருட கார்த்திகைமீ உஅ வெள்ளிக்கிழமை (14 டிசம்பர் 1951) [இல - எக]


## பிரதமர் பதவியிற் பிரேமை யில்லை

பிரதமர் சேனநாயகவுக்கும் திரு பண்டாரநாயகவுக்கு மிடையே கேச மனப்பான்மை உண்டாக்க அநுராதபுர மக்கள் முயல்வதைக் குறித்த ஓர் அறிக்கையில் தமது கொள்கைகளுக்கு காட்டின் நன்மையே யன்றிப் பிரதம மந்திரிபதவி காரணமல்ல வென்று தெரிவிக்கின்றார் திரு பண்டாரநாயக.

வாரல்லவில் நடந்த ஐக்கிய தேசியக்கட்சிக் கூட்டத்தில் பிரதமர் பதவிக்குத் தாம் ஆசைப்படவில்லையென்று திருடட்லி சேனநாயக சொல்லுகிறார்.

சேர் கொத்தலாவலையும் இப்படிச் சொன்னால் யாது செய்வோம் நாம்?

# வள்ளுவர்தந்த அரசியல்நெறிமுறை

## அரனுின் பிரதிநிதிகளே அமைச்சர்கள்

மக்களின் நன்கு மதிப்பை மேம்படுத்துவதில் நிகரற உயர்ந்த அறிவினது பல்வகைப் பெருமைகளையும் அருமையாக எடுத்தோதிய தெய்வப்புலவர், அவ்வறிவால் அரசர்கள் செய்வனவும் தவிர்வனவும் இவை என உணர்த்தப் புகுந்து, யாவர்க்கும் நன்மையே செய்க. சிறிதேனும் தீங்கு செய்யற்க என்று கூறுமுன், நல்லவற்றைச் செய்வதைக் காட்டினும் தீயவற்றைச் செய்யா தொழிதலே சிறந்த வழி என அறிவுறுத்துவாராய், அறிவுடைமையை அடுத்து 'குற்றங்கடிதல்' என்னும் அதிகாரத்தை முறையே நிறுத்தி விளக்குகின்றார். ஒருவர்க்கு நன்மைபுரிய விரும்புவோருக்கு முதலில் பொருள் வேண்டும். உதவி செய்தற்கு ஏற்ற உடல் நலமும் தக்க காலமும் இடமும் தேவை. எவ்வகையில் உதவலாம்? உதவி பெறுவோர் மகிழ்ந்து பயனடைய வேண்டும் என்று சிந்திக்க வேண்டும். உதவி புரியும் தமக்குச் சிறுமை உண்டாகா திருந்தலையும் கவனிக்க வேண்டும். இத்தனை இடர்ப்பாடுகளுக்கிடையே உதவி பெறுவோர் தகுதியையும் நோக்கிச் செய்ய வேண்டி யிருக்கின்றது. இனித் தீமை செய்யாம லிருப்பதற்குப் பொருள் வேண்டாம். உடல் உழைப்பு வேண்டாம். மற்றும் எவ்வித சிந்தனையும் தேவையில்லை. இது அவ்வளவு எளிது. ஆதலாற்றான் "நல்லது செய்தல் ஆற்றீ ராயினும், அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான், எல்லோரும் உவப்பது அன்றியும் நல்லாற்றுப் படூஉம் நெறியுமா ரதுவே" எனச் சான்றோர் சாற்றிப் போந்தனர். அனைமாயின், நன்மை செய்தலால் வரும் புண்ணியப் பயனை, தீமை


புலவரேறு அ. வரதநஞ்சயனுர் 'திருவள்ளுவர்'வெளியீட்டில் எழுதியவை


செய்யாது அமைந் திருந்தால் கிடைக்குமா? எனின், ஆம தப்பாமற் கிடைக்கும். அதுவேயன்றி எல்லோரும் மகிழுஞ் செயலும் அதே தன்றிப் பிறிதல்ல என்றும் மேற்கண்ட புறநானூற்றுச் செய்யுள் செப்புகின்றது. இதற்கு மேற்கோள் ஒன்று காட்டுவோம். ஒரு பிச்சைக்காரன் பிச்சைகேட்க வந்தான். அவ்வீட்டுக்காரன் பிச்சையில்லை போ என்றான், பிச்சைக்காரன் மறுபடியும் கெஞ்சினான். வீட்டுக்காரன் ஒரு கல்லை எடுத்துப் பிச்சைவாங்கும் சட்டியை உடைக்க வரக்கண்டு அவ்வேழை "ஐயா! தாங்கள் பிச்சையிடாவிட்டாலும் இச் சட்டியை உடைக்காதீர்கள். உங்கட்குக் கோடிபேர்க்கு அன்னமிட்ட புண்ணியம் உண்டாகும் என்று ஓடிவிட்டான். பிச்சை இல்லை என்று ஒரு பேச்சுச் செலவுடன் நில்லாமல், ஓடிக் கல்லைத் தேடிப் பிச்சைச் சட்டியைக் குறிபார்த்து, அது உடையும் அளவுக்கு வேண்டிய விசையுடன் கோலை உயர்த்தி, வீசி, இத்தனை கஷ்டப்படுவானேன்? இம் முயற்சியினால் தேடிக்கொண்டதும் பாவமேயன்றோ? இதனைக் கூர்ந்து நோக்கின் தீமை செய்யாமையே மிகவும் நன்மையை உண்டாக்குவதற்குச் சிறந்த எளிய சாதனம் என்பது புலனாகும்.

### பகவத்கீதைப்பணி

இனி, இந்திய செய்லகைளைத் தாண்டிவிடும் கொடிய குணங்கள் எவை யென்பதையும் அறிந்தோமானால் தீமைகளைத் தடுக்கும் வழிகளும் தென்படும். பகவத்கீதையில் கெட்ட குணங்கள் நம்மிடம் எவ்வாறு தோன்றுகின்றன என்பதைக் குறித்து விவரமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

"த்யாயதோ விஷயான்பும்ஸான் ஸங்கஸ்தேஷூ பஜாயதே. ஸங்காத் ஸம்ஜாயதேகாம. காமாத் க்ரோதோபி ஜாயதே க்ரோதாத் பவதி ஸம்மோஹ. ஸம்மோகாத் ஸ்ம்ருதிவிப்ரம, ஸ்ம்ருதிப்ரம் ஸாத் புத்திநாஸ, புத்திநாஸாத் பிரணஸ்யதி.

"மனிதன் கண் முதலிய இந்திரியங்களினுல் உலகப் பொருளை


தொடர்ச்சி 4 – ம் பக்கம்


## பாடசாலைப் பரிசோதகர்

### புதிய முறைப்படி நியமனம்

பெரும் பிரிவுப் (District) பாடசாலைப் பரிசோதகர்களைத் தெரிந்தெடுப்பதற்கு ஓர் புது முறையை அரசாங்கம் அமைக்கின்றது. இற்றைவரை பரிசோதகர்களுக்குள்ளே யே பெரும்பிரிவுப் பரிசோதகர்கள் தெரிந்தெடுக்கப்பட்டனர். ஆனால் வருங் காலத்தில், குறித்த பரிசோதகர்களின் தேவை பிரசித்தஞ் செய்யப் பட்டு, அதன்படி விண்ணப்பஞ் செய்பவர்களுள், தேவையான தொகையினரைத் தெரிந்தெடுக்க ஓர் சபையைக் குறித்த புதுமுறை தருகின்றது.

## நினைப்பார் நம் நெஞ்சான்.........

நெருப்புருவ திருமேனி வெண்ணீற்றானை நினைப்பார்தம்
நெஞ்சானை நிறைவா னானைத்
தருக்கழிய முயலகன்மேல் தாள் வைத்தானைச் சலந்தரனைத்
தடிந்தோனைத் தக்கோர் சிந்தை
விருப்பவனை விதியானை வெண்ணீற்றானை விளங்கொளியாய்
மெய்யாகி மிக்கோர் போற்றுங்
கருத்தவனைக் கண்ணு ராண்ட கோவைக் கற்பகத்தைக்
கண்ணாரக் கண்டுய்ந்தேனே.

—அப்பர் அடிகள்

அரசியல் அலை

# இடதுசாரிகள் இசைகின்றனர்

## தமிழ் மொழிக்குச் - - - - சமத்துவ தத்துவம்

### மந்திரிமார் வாய்விட்டுப் பேசமாட்டார்களா?

இந்துசாதனத் தலையங்கத்தில் ஆசிரியர் இலங்கைப் பல்வேறு கட்சியினருக்கும் விடுத்த வினவுக்குப் பதிலளிப்பான்போன்று சமசமாஜக் கட்சித் தலைவர் Dr. கொல்வின் R. de. சில்வா தங்கள் கட்சிப் பத்திரிகையில் அரசாங்க மொழிகளைப் பற்றி எழுதும்போது தமிழும் சிங்களமும் எவ்வாற்றானும் சமத்துவ தத்துவம் பூண்டனவாய் இலங்கையில் எப்பாகத்திலும் வழங்கி வரவேண்டும் என்று மிகவும் உற்சாகத்தோடு உரைத்திருக்கின்றனர்.

திரு பண்டாரநாயக என்ன சொல்லுகின்றார், என்ன கூறியிருக்கின்றார் என்று தமிழுலகம் செவி சாய்த்துக்கொண்டிருக்கிறது. விடுதலைக் கட்சி விராசிங்கம் தமிழுக்கும் சிங்களத்திற்கும் உயர்வு தாழ்வற்ற ஒரேமுகமான தத்துவம் அகில இலங்கையிலும் உண்டு என்று சொல்லுவாரா என்று அரசியல் உலகம் ஆவலுறுகின்றது. இலங்கைத் தலைமை தாங்க முன்வந்தவர்கள் இலங்கை, தமிழர்கள் சிங்களவர்கள் இஸ்லாமியர்கள் என்ற பல சாதியினர்தம தாயகம் என்பதை மறந்துவிடக்கூடாது.

பொதுத்தேர்தலுக்கு முன்னர் அரசியற் கட்சிகள் அரசாங்க மொழிபற்றிய உண்மையான அடிப்படையான கொள்கைகளை வெளியிடாவிட்டால் மீனுக்கு வாலும் பாம்புக்குத் தலையுங் காட்டிய விலாங்கு மதி படைத்த வினர்களென்றே கருதப்படுவார்கள்.

Dr. de. சில்வா துணிந்து அட்சரம் பிறக்கச் சொன்னது போல அரசியற் கட்சித் தலைவர்கள் இவ்விஷயத்திற் கள்ளம் கபடமின்றிக் கருத்தை வெளியிடுவார்களா என்கிறீரும் — மாட்டார்கள் என்கிறார் திரு பொதுசனம் — இருந்து பார்ப்போம்.

## மதுவிலக்கு இயக்கம் வளர்கிறது

ஆரப்பற்றைப்பிலுள்ள கன்னுந் தவறணைகளை ஒழித்தற்குச் சென்ற சனிக்கிழமை (8-12-50) அங்கு நிகழ்ந்த வாக்கெடுப்பில் 1475 பேர் சாதகமாகவும் 8 பேர் பாதகமாகவும் வாக்களித்தனர்.

இவ்வித வெற்றி எங்கும் மலிக.

## அரசாங்க ஆங்கில பாடசாலைகள் இனி இல்லை

தமிழும் சிங்களமும் அண்மையில் அரசாங்க மொழிகளாதல் நிச்சயமாதலினாலே அரசாங்கம் இனி ஆங்கில பாடசாலைகளை அமைக்க மாட்டாது என அறுதியிட்டுக் கூறினார் கர்தாலையில் நடந்த பாடசாலைக் கூட்ட மொன்றில் மந்திரி திரு. M. D. பண்டா அவர்கள்.

# இந்திய தேர்தலும் - - - - தேசீய மகாசபையும்

## இமாசலத்தில் ஏராளமான வெற்றி

இந்திய பொதுத் தேர்தலில் இமாசலப் பிரதேச அரசாங்க சபையில் 36 அங்கத்தவர்களை இடங்களில் 31 இடங்களின் தேர்தல் விபரங்கள் வெளியாகிவிட்டன.

இந்திய தேசிய மகாசபை (Congress) 22 கிருபாலனி கட்சி (K. M. P. P.) 1 அம்பேட்கார் கட்சி 1. கட்சிப் பற்றற்றோர் 7 ஆக இப்போதைய நிலைமை இருக்கின்றது.

## விதை வெங்காயம்

வடபகுதி விவசாயவுற்பத்தியாளர் சங்கக் காரியதரிசி திரு. N. T. சிவஞானம் அவர்கள் 500 தொன் விதை வெங்காயம் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருவிப்பதற்கு விசேஷ அனுமதி பெற்றிருக்கின்றனர்.

தேசீய மகாசபையினின்றும் பிரிந்த கிருபாலனிக் கட்சியார் ஒரேயொரு ஸ்தானத்தைத் தான் பெற்றுக் கொள்ளக் கூடியதாயிருந்தது குறிப்பிடத்தக்கது.

THE SAIVAPRAKASA PRESS

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே

# இந்துசாதனம்

யாழ். கர வருஷ கார்த்திகைமீ உஅ உ வெள்ளிக்கிழமை

## மோட்டார் இரதங்களா? எமன்களா!

நாட்பொழுது நாழிகையாகச் செய்யும் நவீன காலம். விஞ்ஞானத்தின் வெற்றிக் காலம். நெடுவழி நடந்த காலமெல்லாம்போய், மிருக வாகனங்கள் மீ திவர்ந்த நாட்கள் கழிந்து, மோட்டார் மின்சாரம் முதலிய விஞ்ஞான விருத்தியின் பயனாகப் பலநாட் பிரயாணம் சில நாழிகைப் பொழுதிற் செய்யக்கூடிய காலம் வந்ததும் வேகத்திற்கு ஒரு தனி மதிப்புத் தானாகவே உண்டாகிவிட்டது! வேகமே வாழ்க்கையின் மிக மிக முக்கியமான ஒரு அம்சமாய்விட்டது! அவ்வளவில் இருந்துவிட்டால் ஆரும் விரும்பத்தக்கதுவே. ஆனல் வாழ் நாட்களையே வேகம் குறுகிவிடச் செய்கின்றமையால் காலத்தைக்குறைக்கும் காலனுர் காலம் என்றுதான் சொல்லவேண்டியதாயிருக்கின்றது.

விஞ்ஞான வித்தையின் பயனாக வேகமாகப் பிரயாணஞ் செய்யக்கூடிய வாகனமே மோட்டார் இரதம். சாதாரணமாக அதை ஓட்டிச் சென்றால் மனிதனுக்குத் தேவையான வேகத்தில் வேண்டிய காரியங்களைச் செய்துமுடிக்கக் கூடியதாயிருக்கும். இருந்தும் இயற்கையா யமர்ந்த இந்த அதி வேகத்தைப் பன்மடங்காகக் கூட்டி மனோ வேகமாய், வாயு வேகமாய் மின்சாரவேகமாய்ப் பறந்து செல்லும் மோட்டார் இரதங்கள் மனித சமூகத்திற்கும் மற்றும் உயிருள்ள பிராணிகளுக்கும் உருவமாய் உலகில் உலாவித் திரியும் ஓராயிரம் எமன்கள் போன்றிருக்கின்றன என்பதை நாளாந்தம உலகில் இத்தகைய இயந்திரங்களால் நிகழும் உயிராபத்துப் புள்ளி விபரங்களைப் புதினப் பத்திரிகைகளிற் படிப்போர்க்குநன்கு புலப்படும்.

மோட்டார் இரதம் ஓட்டும் பணியைத் தாங்குபவர்கள் அவ்வியந்திரத்தை இயக்கவும் அதனை அடக்கி ஆளவும் ஆபத்துக் காலத்தில் மனோதைரியத்துடன் நிலைமையைச் சமாளித்துக் கொள்ளவும் கூடிய சாதுரியமும் தத்துவமும் உடையர் என அரசினரால் நற்சாட்சிப் பத்திரமளிக்கப் பெற்று உத்தரவுச் சீட்டுக் கொடுக்கப் பெற்றவர்களாயிருந்தும் இவ்வாறு மோட்டார் இரதங்களினால் விபத்துக்கள் விளையவேண்டிய காரணமென்ன வென்று ஆச்சரியப்பட வேண்டியதாயிருக்கின்றது இந்த நற்சாட்சிப் பத்திரங்களும் உத்தரவுச் சீட்டுகளும் சீராய் ஆராய்ந்து செவ்வனே பரீட்சிக்கப்பெற்ற சாரதிகளுக்கு மாத்திரம் கொடுபடுகின்றனவா என்பதை நாமறியோம். அன்றியும் மோட்டார் இரதம் வீதியில் ஓட்டப்படத்தக்க உன்னதநிலைமையில் இருக்கின்றதா என்ற கேள்வி அந்த இரதத்தின் வருடாந்த உபயோக உத்தரவுச் சீட்டுப் பெறுங்காலத்திற் பரிசீலனை செய்யப்பட வேண்டியதொன்றெனினும் கிரமமாகச் சிரமமெடுத்துப் பரிசீலனை செய்யப்படுகின்றதா என்பதை ஆர் அறிவார்.

தெருவீதிகளில் போக்குவரத்து அதிகரித்துக்கொண்டுவரும் இந்நாட்களிலே மோட்டார் இரதங்கள் இருபது இருபத்தைந்து மைல் மணித்தியால வேகத்திலுங் கூடுதலாகச் செலுத்தப்படுவது மிகவும் பாரதூரமான தண்டனைக்குளாக்கக்கூடிய குற்றமாகக் கருதப்படுவதுமன்றி முச்சந்திகள் நாற்சந்திகள் பள்ளிக்கூடங்கள் வைத்திய சாலைகள் சந்தைகள் முதலிய சனத்திரள் வழக்கமாயுள்ள இடங்களிலாவது வேகம் பதினைந்து கட்டைக்குமேலாக இருக்கக்கூடாது என்று சட்டம் பிறப்பிக்கப்படல் வேண்டும். சட்டம் இருப்பதோடமையாது சட்டத்தை அறுட்டிக்கின்றார்களா என்பதை அவதானித்துக் குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கு ஏற்ற ஒழுங்குகளை அதிகாரிகள் எடுத்தாளவும் வேண்டும்.

---

### அரசாங்க ஆடைத் தொழில்

அரசாங்கம் அமைத்த 31 ஆடைத்தொழில் நிலையங்களாக சென்ற 10 வருட காலமாய் கட்டப்பட்டு வருவதால் அவற்றை ஐக்கிய சேவு சங்கங்களுக்குக் கொடுக்க ஒழுங்கு செய்யப்படுகின்றது.

---

### கிராமப் பிணக்குகள் தீர்க்குஞ் சபை

நாவலப்பிட்டியைச் சேர்ந்த கெலனிகம—டகப்பிரிய என் னுங் கிராமத்திலே எழுகின்ற பிணக்குகளைத் தீர்ப்பதற்கு ஓர் சபையை அங்குள்ள கிராம முன்னேற்றச் சங்கம் நிறுவுகின்றது.

ஏனைய கிராம முன்னேற்றச் சங்கங்களும் சனசமூக நிலையங்களும் இதை ஓர் முன் மாதிரியாக்கித் தாமும அவ் வழி உழைத்தல வேண்டும்.

---

# நிறையிறந்த மொழியபிமானவெறி

## இடதுசாரிகள் கண்டனம்

தேசிய மொழிநிலை ஆராய்ச்சியைத் தளர்வுறவிட்ட ஐக்கியதேசிய அரசாங்கம் அதைச் சீர்கேடச் செய்யத் துணிந்துவிட்டதுபோலிருக்கின்றது. அன்றியுந் தேசிய மொழிநிலை ஆராய்ச்சிக் குழுவும் இதற்கு உதவுந் தன்மையதாயே தோன்றுகின்றது.

தமிழும் சிங்களமும் அரசாங்க மொழிகளாக மாறுதலே தேசிய மொழிநிலை ஆராய்ச்சியின் இறந்த அணியாகும். அத்தகைய மாறுதல் இன்றேல் தேசிய மொழிவளர்ச்சிக்கு உழைத்தலென்பது வெமாறும் அல்லது பொய்மொழியென்று யாவரும் காணக்கிடக்கின்றது.

இந்த மாறுதல் ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு அல்லது சிங்களத்துக்கு மாத்திரமன்றி இருமொழிகளுக்குமாதல் வேண்டு மென்பது வலியுறுத்த வேண்டியது. குறுகிய எல்லையுள் மாகாணமொழிகளாக்காது இருமொழிகளையும் உண்மைத் தேசிய மொழிகளாக்குதலே எம் கடன்.

ஐந்து வருடங்களுக்குள் சிங்கள மாகாணங்களைச் சிங்களத்தாலும் தமிழ் மாகாணங்களைத் தமிழாலும் ஆளுதற்கே ஐக்கிய தேசியக் கட்சியினரும் தேசிய மொழிநிலை குழுவினரும் ஒழுங்கு செய்கின்றனர். மாறுதலமையுங்கால அளவிலும் பார்க்க இத்தன்மைத்தின் தீயதன்மையே எம்மை வருத்துகின்றது.

இதன் விளைவு என்னவென்று சற்று ஆராய்வோம். தமிழ் மாகாணங்களுக்கும் சிங்கள மாகாணங்களுக்குமிடையே நின்று உதவும் மொழி எது என்பது முதல் இடரு ஆதல் தெளிவுபொருளாகின்றது. இது தமிழா? சிங்களமா? அல்லது இவற்றை ஒதுக்கி நிற்கும் பொருட்டு ஆங்கிலமா? ஆங்கிலமே

சமசமாஜ கட்சித் தலைவருள் ஒருவரான Dr. கொல்வின் R. de. சில்வா கூற்று

ஆங்கிலமொழியாயமைதல் இவர் கருதமெனினும் சந்தேகம் உண்டாகின்றது. இது பொருத்தமே! சிங்களருக்குச் சிங்களம்! தமிழருக்குத் தமிழ்! ஆனால் அகில இலங்கையருக்கு ஆங்கிலமே!

இதுவன்று திரு. ஜயவர்தனவின் உண்மையான உள்ளக்கிடக்கை இன்னொன்றென உள்ளுற்றிட முண்டு.

பசுத்தோல் போர்த்த புலியைப் போல் இவர் இலங்கைமயவாதி என்னும் கபட வேடத்துடன் உண்மையான சிங்கள வகுப்புவாதியாகவே யிருக்கிறார். இவருடைய நயவஞ்சக நினைவு இருகுறியுடையது. ஒன்று இலங்கையின் பெரும் பாகம் சிங்கள ஆதிக்கத்துக் குள்ளாக்குதல், மற்றது காலகதியிலே சிங்களமே தனி அரசாங்க மொழியாக்குதல்.

இன்றைய மாகாணப் பிரிவுகள் மொழிநிலை கருதாது ஆட்சி வசதிக்கு அமைக்கப்பட்டன. பெரும்பான்மையோர் வசிக்குமிடங்களில் சிறுபான்மை மொழியினர் வாழ் சிறு நிலத்துண்டுகளிருக்கும். ஆகவே சிறுபான்மையோர்மீது பெரும்பான்மையோர் மொழியை வலிந்து செலுத்துவதே இவரகள் கருத்தாகின்றது. எனவே திரு. ஜயவர்தனவின் விருப்பப்படி சிங்கள மொழியே உயரிய வெற்றி நிலையெய்தும்.

இவ்வாறாக, ஒன்பதில் ஏழு மாகாணங்களிலும் வெற்றி வீர ஆதிக்கத்துடன் நிலவும் சிங்களம் காலகதியில் முழு நாட்டிலுமே ஆதிக்கம் காட்டித் தனி அரசாங்க மொழியாம் ஆதிக்கபீடத்திலமரும். இது நிறையிழந்த மொழி அபிமான வெறியாகும்.

மீண்டும் வகுப்பு வாதமாதலே இதன் விளைவாகும். இத்தீய விளைவுக் கிடங்கொடாது இரு மொழிகளையும் இலங்கை முழுதுக்கும் அரசாங்க மொழியாக்குதலே சாலச் சிறந்த முறையாகும், இதுவே சமதர்மக் கட்சியின் வழி!

---

### அனுமதிகள் சட்டம்

அனுதைகளுக்கு அரசாங்கம உதவி செயயும முறைகள் சில அருவருப்பான செயலகளுக் கிடங் கொடுக்கின்றன குறித்த சட்டமே இதற்குக் காரணம்.

அரசாங்க உதவி பெறுதற்கு ஒருவருடைய வறுமையின் தன்மை எப்படிப் பட்டது, அவருக்குக் கொடுகவேண்டிய தொகை எப்படி நிச்சயிக்கப்படவேண்டும என்று அறிதற்குக் குறித்த சட்டத்தில் ஒன்றுமேயில்லை. வேண்டிய திருத்தஞ் செய்யாவிடின பிழைகள பலியும்.

### ஐக்கியதேச சபையிலிருந்து தென் ஆபிரிக்கா நீங்குமாம

ஐக்கியதேசப பொதுச்சபையிலிருந்து தற்காலிகமாகத் தாங்கள் நீங்குவதாய், தென் ஆபிரிக்க அரசாங்கம தெரிவிக்கின்றது. ஐக்கியதேசச சபையார் தம்மை எதிர்த்து நெருக்குவதே காரணமாம.

ஐக்கிய தேசச் சபையார் இடையறந்துவருத்தினர். தாம இதில ஒன்றுஞ் செய்ய முடியாதென்று பிரிதானிய அரசாங்கமும தெரிவிக்கின்றது.

---

# வாழ்க்கை வானில்

வளர்மதி

வரியணைக்கும் வயதில் பேரப்பிள்ளைகளை வயது முதிர்ந்த சிறு விளையாட்டு விரும்பும் தாத்தாக்கள் — இதைக் கணக்கைச் சொல்லு பார்ப்போம என்றுவிட்டு எங்கள் வீட்டுச் சேவல்கள் மூன்று உங்கள் வீட்டில் ஐந்து முட்டைகள் போட்டால் முட்டைகள் யாருக்குரியன! என்ற ஒரு அசம்பாவித கேள்வியைக் கடாவுவார்கள். சேவலும் பேடும் என்ற வித்தியாசம் தெரியாத வயதினராஞ் சிறார் கணக்கைச் செய்ய ஆரம்பித்து மூளை பொழிந்து விளையாடுவர். ஆனால் இது பொழுதுபோக்கு

* * *

பாடசாலை நாட்களில் விகடவினோத விருப்புள்ள ஆற்றல் மிக்க மாணவர்கள் விளக்கமற்ற மற்றையோருக்கு 'வால கட்டு'வதென்றொரு வழக்கம் உண்டு. முன்னையவரிற் பலர் சேர்ந்து பின்னையவரில் ஒருவரைப் பார்த்து சரி இதைச் சொல்லு பார்க்கலாம். "யாழ்ப்பாணத்தில் தினமும் 30 மைல ஒரு மணித்தியாலம்ஓடும் புகைரதம 7 மைலுக்கப்பால் அல்ல சுன்னாகத்தில் வந்ததும் 9 பேர் இறங்கினர்கள். தெல்லிப்பழையில் எத்தனைபேர் இறங்குவார்கள்".

இதுதானும்விகடவிச்சு. எவருக்கும இன்னலை விளைக்காது.

* * *

இவைபோன்ற சிரேஷ்ட பாடசாலைத் தராதர ஆங்கிலப் பரீட்சையில் ஒரு பாடத்தில் முதலாவது வினா மூளைக்கே முழு ஆபத்தை விளைக்கக் கூடிய முரட்டுக் கேள்வியாக இருந்தது என்று அறியக் கிடக்கின்றன. முன்னர் கூறிய தாத்தாவின் பொழுது போக்கல்ல இஃது. அறிப் பள்ளிக்கூட விகட மாணவர்களின வேடிக்கைக் கணக்கல்ல. ஒரு மாணவனின் வாழ்க்கையைத் தாக்கக்கூடியது.

பரீட்சை என்றால் பரீட்சிப்பவரின் திறனைத் தெரிவிக்கும முறையா அல்லது மாணவன் தான் கற்ற பாடத்தை எவ்வாறு அறிந்திருக்கிறான் என்றுதெரிந்துகொள்ளும வகையா? அறிக் கல்லாதவற்றில் வல்லாளரோ மாணவர் என்று பார்ப்பதுதானே? தானறியாத சமஸ்கிருதமபோனறு வினவித்த வித்தகர் விடையறியாது மயங்குவதையும் வாழ்க்கை வானிற கண்டு வளர்மதி விளக்கவேண்டியிருக்கின்றது.

---

## மந்திரியைத் தாக்குகின்றார் பாராளுமன்ற அங்கத்தவர்

யாழ்ப்பாண நகர மண்டபத்தில நடந்த தமிழ் அரசுக் கட்சிக் கூட்டத்தில மஸ்கெலியாப்பிரதிநிதி திரு. A. அசீஸ் கைத்தொழில் மந்திரி திரு. G. G பொன்னம்பலத்தின் செயலகளை கண்டிக்கும்பொழுது "நேற்று இந்தியன், இன்றைக்கு இந்தியன், நாளைக்கு இந்தியன் என்றைக்கும் நான் இந்தியனே. தோட்டத் தொழிலாளர் நலன் ஒவ்வொரு இலங்கைவாழ் தமிழனுடைய நலனே" என்று மந்திரி ஆவதற்கு முன் அறைந்து திரிந்த பெரியார், தன் கூற்றெல்லாவற்றையும மறந்து அவர்களுடைய பிரஜா உரிமையையே பறிக்க ஐக்கியதேசியக் கட்சி அரசாங்கத்துடன் சேர்ந்து உழைக்கின்றார்" என்று கூறித் தாக்கினர்.

---

### தீப்பெட்டி விலை

தீப்பெட்டி ஒன்றுக்கு 1½ சதமல்ல ½ சதமே கூடுகிறது. 3 சதமாயிருப்பது 3½ சதமாகும.

## சைவக்குருத்துவ ஆக்கம்

### அதற்குத் தகுந்த கல்வி

சைவக்குருக்கள் ஆக்கத்தி லும் அவர்கள் கல்வியிலும் ஆர்வமுள்ள சைவமக்கள் கூட்டமொன்று பம்பலப்பிட்டியி லமைந்திருக்கும் கொழும்பு இந்துக்கல்லூரி மண்டபத்தில் திரு. S. நடேசன் அவர்கள் தலைமையில் கிழமை கார்த்திகை மாதம் 23-ந் திகதி நடைபெற்றது.

அத்தருணம் ஆர்சுவேலி பிரமஸ்ரீ S. குமாரசுவாமிக் குருக்கள் முதலிய தகைமை வாய்ந்த குருக்கள்மார் சமூக மளித்துக் கூட்டத்தைச் சிறப்பித்தனர். குருக்களவர்கள் யாழ்ப்பாணம், கொழும்பு மட்டக்களப்பு, திருக்கோணமலை முதலிய இடங்களில் குருக்கள் ஆக்க நிலையங்கள் அமைக்க வேண்டுமென்றும் வேதாகமக் கல்வி இன்றியமையாததென் றும் கூறும்பொழுது சைவ சமயத்துக்குச் சமஸ்கிருதமும தமிழும் இருகண்களாயமைக் திருக்கின்றன என்பதைச் சிறப்பாகச் சுட்டிக் காட்டினர்.

இத்தொடர்பில்வேண்டியன செய்தற்குச் சைவப் பெரியார் பலர் சேர்ந்த சபை ஒன்று அமைந்துக் கூட்டம் நிறைவு பெற்றது.

## அரசாங்க சேவை உறுப்பினருக்குத் தேசிய மொழி வகுப்பு

அரசாங்கமொழி நிலை ஆராய்ச்சிக் குழுவினர் அரசாங்க சேவை உறுப்பினருக்குத் தேசிய மொழி வகுப்புக்கள் அமைக்க அடிகோலுகின்றனர்! சிங்கள உறுப்பினர் தமிழையும் தமிழ் உறுப்பினர் சிங்களத்தையும் படிக்க இது உதவும் இவர்களுக்கு ஊக்கம் உண்டாக்கும்பொருட்டு பண உதவியும் செய்ய உத்தேசிக்கின்றனர்.

## உணவுப் பொருள் ஆராய்ச்சி

உணவுப் பொருள் ஆராய்ச்சிக் கழகத்தார் குறிப்பின்படி ஓர் உணவுப் பொருள் ஆராய்ச்சி நிலையத்தை அமைக்க அரசாங்க உணவுப் பொருட்பகுதியார் தீர்மானித் திருக்கின்றனர்.

இது உள்நாட்டுப் பொருட்களுள் நல்லவற்றைத் தெரிந்து மக்கள் உணவுக்கு உபயோகிப்பதற்கு உதவியாகும்.

## முஸ்லிம்களுக்குத் தாய்மொழி இல்லையாம்!

### புத்த குருவின் புத்திமதி!

தமக்கென ஓர் மொழி முஸ்லிம்களுக்கு இன்றென்றும் இல்லையால் அவர்கள் சிங்களத்தையே தங்கள் மொழியாகப் படித்து அந்த அரசாங்க மொழியாக உதவுதல் நன்றென் றும் அனுராதபுரப் பகுதியிலுள்ள பதிருஜகொடக் கிராம முன்னேற்றச் சங்கக் கூட்டத்திற் பேசும்பொழுது புத்தகுரு திரு. சுமண சிறி முஸ்லிம்களுக்குப் புத்திமதி புகட்டினாராம்! வாஸ்தவமான இஸ்லாமியருக்குத் தமிழ் மொழியே தாய்மொழியாம் என்பதை இக்குரு அறிந்திலர்போலும்!

---

# உங்கள் நக்ஷத்திரம்?

ஸ்ரீ ராதா கிருஷ்ணன் கணிப்பது.

எங்கள் சோதிடம்

இவ்வாரப் பலன்கள் 16—12—51——22—12—51

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

இந்தவாரம் அதிகசெலவு; பெண்பாலார் பக்கத்தால் சண்டை சச்சரவுக்கிடம்; ஆனால் தொழில் முறையில் நல்லகாலம்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

பணம் இழத்தல் அல்லது சிறு சுகவுக்கிடமுண்டு; தொழிற்றுறையிலும் தொந்தரவுண்டு; மனச்சாந்தமில்லை; ஆனால் வார முடிவில் வெற்றி பெறலாம்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3 4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3.

இந்த வாரம் குடும்ப வழியில் இன்பமுண்டு; நண்பரால் அதிக உதவி; வெளியூர் இனத்தவர்கள் அல்லது நண்பர்களிடமிருந்து மகிழ்ச்சியான செய்தி வாரமுடிவில் வரும்.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.

புது முயற்சிக்கு நல்ல கிழமை; எதிரிகள் நாசமும் புகழுக்கிடமும். இனத்தவரால் அதிக உதவி; நன்மதிப்பு அதிகரித்தல் நிச்சயம்.

**சிங்கராசி** மகம், பூரம், உத்தரம், 1ம் பாதம்.

வார முடிவில் தொழில் முறையில் எச்சரிக்கை; பண நெருக்கடிக்கும் இடமுண்டு; வார முடிவின் முன் பிரயாணம் அல்லது இடமாற்றம் வரலாம்.

**கன்னிராசி** உத்திரம் 2,3,4ம் பாதம அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

பணத்துறையில் நன்மை; குடும்பசந்தோஷமுமுண்டு; புது முயற்சி விரும்பிய நன்மைதரும். பெண்பாலார் உதவிக்கிடம்.

**துலாம்** சித்திரை 3, 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்

இந்த வாரம் செலவு கூடும், ஆனால் சொந்தச் சிக்கல்கள் தீரக் நல்ல வாரம் வியாபாரிகள் நல்ல செய்திகள் எதிர்பார்க்கலாம்.

**விருச்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அனுஷம், கேட்டை.

ஞாயிறு காலை கவனமாய்க்கழிக்கவேண்டும். வியாபாரத்துக்கும் வேறு தொழிற்றுறைக்கும் வார திருதிகன்று. வாரமுடிவுக்கு முன் சந்தோஷக் கொண்டாட்டம்நிச்சயம்

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

வாரத்தின் முதல்மூன்று நாளும் கவனமாகக்கழிக்கவேண்டும். பண நெருக்கடிக்கும் குடும்பத்தொந்தரவுக்கும் இடமுண்டு புதன்கிழமையின்பின் திருந்தும்.

**மகரராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

இந்தவாரம் புதிதாய் ஒன்றும் தொடங்கவேண்டாம் பழிசொல்வோரால் தொந்தரவுக்கிடமுண்டு. புதனும் வியாழனும் ஆகப் பிழையான நாட்கள். வார இறுதியிற் சில சுபசெய்திக்கிடமுண்டு.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்.

இறுதி இரண்டுநாட்கள் தவிர்ந்த எல்லா நாட்களிலும் இந்த வாரம் சந்தோஷத்துக்கிடமுண்டு. பணநிலை திருந்தும், குடும்பத்தில் அல்லது தொழிற்றுறையில் இறுதி இரண்டு நாட்களும் தொந்தரவு நாக்கூடும்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.

இவ்வாரம் பண நன்மை, அதிகாரிகள் உதவியும் குடும்பச் சந்தோஷமும் வரும். புது முயற்சிகளில் முன்னேறுக

---

# பொதுவுடைமையைப் போக்கப் புனிதநெறி

## "நான்" என்பது ஒழியின் நன்றாய் அமையும்

பொதுவுடைமைக் கொள்கை (Communism), இக்காலத்துமக்கள்வாழ்க்கையில், பெரும்மாறுதல்களை உண்டாக்குகின்றது, இதை உலகுக்குத் தந்தவர்கள் மார்க்ஸ் (Marx) முதலிய ருஷிய மக்களே என்றும் இதற்குத் தாயகமாயுள்ளது ருஷியாவே யென்றும், ருஷிய மக்களே இதை உலகின் பல பகுதிகளிலும் பரப்புகிறார்களென்றும் நாம் சொல்லுகின்றோம்.

இது எவ்வாறாயினும் ஆகுக. இக் கொள்கை எத்தகையது. இதை நாம் கொள்ளுவதா? அல்லது தள்ளுவதா? என்று ஆய்தல் இன்றியமையாதது. இதன் மூலாதார உறுப்புக்களை விளக்குதற்கு இங்கிலாந்திலே பொதுவுடமை இயக்கத்தை உண்டாக்குதற்கு மூலகாரணராயிருந்த வில்லியம் கலச்சர் (Wm Gallachar) பொதுவுடைமையின் ஆதாரக் கொள்கையை விளக்கிக் கூறியவற்றுட் சிலவற்றை உற்று நோக்குவோம். "ஒழுங்கில்லாச் சக்திகள் அல்லது மனுஷனுக்கு மேலான ஓர் சக்தி இந்த உலகின்கண் நிகழும் அரசியற் பொருளாதார ஆபத்துக்களுக்குக் காரணமென்றநினைத்தால் உலகின் உண்மைத் தன்மை விளங்க முடியாது"

"மக்கட் டொகுதியினர் தங்கள் வாழ்க்கை விதியைத் தாமே அமைக்கலாம் என்பது நிச்சயம்"

'காட்சிப் பிரமாணத்தால் அளவிடக்கூடிய இந்த உலகே உண்மையானது' என்று மார்க்ஸ் (Marx) சொல்வதை நான் முழுதாய் நம்புகிறேன்'

'எமக்கு ஆதாரமான எல்லாவற்றையும் நன்கு உபயோகித்து ஒவ்வொரு மனுஷனுக்கும் தொழில் உரிமை, ஓய்வு முதலியவற்றால் நிறைந்தஇன்ப

.... அருட்கதிர் .... எழுதுவது

வாழ்க்கையைப் பெறச் செய்வது எங்கள் நோக்கம்' என்பன ஒரு சில எடுத்துக்காட்டுகள், இவை, பொதுவுடைமைக் கட்சியினருடைய வாழ்க்கைமுறை அமைப்பின் ஆதாரக்கொள்கைகளை ஒருவாறு விளக்கும்.

முழுமுதற் கடவுள் இல்லை. மனுஷன் எல்லா ஆற்றலுமுடையவன், இந்த உலகமே உண்மையானது. தக்க முறைகளை ஆண்டு பூரண இன்பம் பெறலாம், என்னும் கொள்கைகள் நன்கு பெறப்படுகின்றன.

இவை ருஷிய நாட்டில் உற்பத்தியானவை என்று கொள்ளுதலே வழக்கமாயிருக்கின்றது. பூரண இன்பந் தரும் என்றலின் இன்பத்தையே இவ்வளவு நாடுகின்ற மக்கள் யாண்டையதாயினும் அதைத் தள்ளுவார்களா? இல்லை. எங்கள் நாட்டிலே கல்வித்துறையிற் பாண்டித்தியம் படைத்தவர்களும் இக்கொள்கையினராயிருத்தல் காணக்கிடக்கின்றது. சைவ நிலயங்களின் முன்னணியில் நிற்பவர்களே இக்கொள்கையினராயிருக்கின்றனரென்றால் வேறு யார் அப்படியிருக்கக்கூடாது?

### சைவநூற் றுணிபு

இஃதே எங்கள் நாட்டின் இன்றைய நிலைமை. ஆகவே இதற்கு ஒப்பாயுள்ளது யாதும் எங்கள் சைவநூற் பரப்புள் இருக்கின்றதா என்று உற்றுநோக்குமாறு உள்ளம் உந்தப்படுகின்றது.

"சோகத்தை மண்ணிற்
கண்டு விட்டுப்போய்
விண்ணிற் கொண்ட
மோகத்தராகி அல்லல்
முயன் றுழல
மூடரெல்லாம்
தாகத்தில் தண்ணீர் கண்டு
விட்டுப் போய்த்
தண்ணீர் வேட்டுச்
சோகித்தே உண்ண
வெண்ணித்து
யருமவர்க ளந்தோ"

"வீட்டினை உளதென்
றோடி வெளிவ
திலகெனனே வீடு
காட்டினேர் கண்டோர்
கேட்டோர் கரியவை
உண்டேல் காட்டீர்
நாட்டினில் அரசனாணைக்
கிசைபவே
நடந்து நாளும்
ஈட்டிய பொருள்கொண்
டிங்கே இன்பத்தின்
இசைந்திடீரே".

(சி. சி. உலகாயதன்மதம்.)

---

## உள்நாட்டு மந்திரியின் கதிர்காமயாத்திரை

சென்ற செவ்வாய்க்கிழமை உள்நாட்டுமந்திரி சேர். ஒலிவர் குணதிலக கதிர்காமம்சென்று காலைப் பூசை தரிசித்துத் திரும்பினர்.

## அரசாங்க உறுப்பினரும் அரசாங்கசபைத் தேர்தல்களும்

அரசாங்க சேவையிலிருப்பவர்களுடைய குடும்பத்தார் எவரும் அரசாங்க சபைத் தேர்தலுக்குப் போட்டியிடலாம் என்றும், போட்டியிடுபவர்களுக்கு உதவியளிக்கலாமென்றும் ஓர் சென்னை அரசாங்க அறிக்கை கூறுகின்றது.

---

சுண்டுந் தந்த இரண்டாஞ் செய்யுளின் மூன்றும் அடியை "நாட்டினில் அரசனாணைக்கிசை தலே இலதாய் நாளும்" என்று படிக்க, இன்றைய பொதுவுடைமைக் கொள்கைகள் எல்லாம் அருணந்தி சிவாசாரிய சுவாமிகளின் காலத்திலேயே எங்கள் நாட்டில் இருந்தன என்பது அறியக் கிடக்கின்றது.

இக்கொள்கையை ஒழிப்பதற்குச் சிலநாடுகளிலே இக்கொள்கையினருக்குப் பெருந்துன்பம் விளைக்கின்றனர். இது அறிவீனத்தாலாகும் செய்கை.

## அஞ்ஞானம் போக்கும் வழி

அறியினத்துக்குக் காரணம் இருளுக்கு ஒருவாறு ஒப்பாய ஆணவமலம் எனப்படும். இருளை ஒளியே நீக்கும். எனவே அஞ்ஞான இருளை ஞான ஒளியால் நீக்க நாம் முயலவேண்டும். இதற்குச் சைவ நூல் தருகின்ற சன்மார்க்கமே சாலச்சிறந்தது. "உளது இலது என்றலின் எனது உடல் என்றலின்" என எடுத்துக்காட்டி, இந்திரியங்கள் முதல் பிராணவாயு ஈறான உறுப்புகளும் அவற்றை உடைய தூல சூக்கும தேகங்களும், இவற்றை ஆராய்கின்ற 'நாம்' என்னும் பொருளல்லவென்பது உற்று நோக்குவோருக்கு உள்ளங்கை நெல்லிக் கனியாகும். நான் தோறும் மக்கள் இவ்வுலக வாழ்வு நீத்தலை நாம் காண்கின்றோமல்லவா! இன்று இவ்வாறு சொல்லும் நாம நாளைக்கு இவ்வாறு சொல்லுதற்கு இருப்போமென்றியார்சொல்ல முடியும்? இந்த உண்மை எம் சித்தத்திருத்தல் வேண்டுமென்பதை உணர்த்துதற் கன்றோ "நெருநலுள னொருவ னின்றில்லை என்னும் பெருமையுடைத் திவ்வுலகு" என்று தெய்வப் புலவரும், "இன்றைக் கிருந்தாரை நாளைக் கிருப்பரென் றெண்ணவோ திடமில்லையே" என்று தாயுமானசுவாமிகளும், 'வந்தவா றெங்ஙனே போமா றேதோ, மாயமாம்" என்று அப்பர் சுவாமிகளும் திருவாய் மலர்ந்தருளினர். இவ்வாறு எம்மை அறிதலும் எமதல்லனை அறிதல் ஆற்றொழுக்காய்ச் சொல்கின்றது. அந்த உயரிய நெறியில் சைவமக்கள் யாவரும் ஒழுகுவாரேயானால் உலகாயதமே உருத்திரித்து வந்த "பொதுவுடைமை" ஆதவனைக்கண்ட பனிபோல் இயல்பாய் ஏகுதல் காணலாம்.

## கொலைக் கொடுமை ஒழிந்தது

காங்கேசன் துறையில் 1945-ம் ஆண்டு பொலிஸ் நிலையம் திறவிய பின் மா பாதகங்களுட் தலையாய கொலை செய்தல் ஒழிந்துவிட்டதாகக் காங்கேசன்துறை கிராம முன்னேற்றச் சங்க வருடாந்தக் கூட்டத்திலே பொலீஸ் அதிகாரி திரு. சிவசம்பு அவர்கள் கூறினர். ஏனையோர் இந்த இனிய செய்தியை உற்று நோக்கி ஏற்றது செய்வாராக.

## எண்ணெய் உற்பத்தி

சிறுவிலில் அமைக்கப்படுகின்ற எண்ணெய் உற்பத்தி யந்திரநிலையம் மெதுகாட்டிற்கு வேண்டிய பலவித எண்ணெய் வகைகளை 1953-ம் ஆண்டில் ஆக்கி உதவும்.

இதற்கு வேண்டிய ஆரம்ப அமைப்புகள் நடைபெறுகின்றன.

## விவாகத்துக்கு வயது

ஆண்களுக்கு முப்பதும் பெண்களுக்குப் பதினெட்டும் விவாகத்துக்கு ஆகக் குறைந்த வயதென விதிக்க வேண்டும் என்று அகில இந்திய குடும்ப அமைப்புச் சபையார் இந்திய அரசாங்கத்தைக் கேட்டிருக்கின்றனர்.

## கமக்காரர் துன்பம்

யாழ்ப்பாணக் கமக்காரருக்குப் பல துறைகளில் துன்பம் மலிகின்றது. வரட்சியால் நான்காம் முறையாக வேளாண்மை பெரு பேறின்றிப் பழுதடைந்துவிட்டது. இதுதான் துக்க நிவிர்த்தி.

## சென்னை தமிழ் இசைச் சங்கம்

ஒன்பதாவது தமிழ் இசை விழா

1951—52

மேற்படி விழாவை சென்னை எழும்பூர் மியூசியம் தியேட்டரில், 24-12-51 திங்கட் கிழமை மாலை 5-15 மணிக்கு யாழ்ப்பாணம் திரு. சு. நடேசபிள்ளை அவர்கள் திறந்துவைப்பார்கள்.

நிகழ்ச்சிகள்

24-12-51 திங்கட்கிழமை மாலை 4-30 மணிக்கு தமிழ் இசைக் கல்லூரி மாணவர்கள்-பாட்டு. மாலை 6 மணிக்கு எம். எம். தண்டபாணி தேசிகர்-பாட்டு. 25-12-51 செவ்வாய்க்கிழமை மாலை 5-[illegible] மணிக்கு எம். கே. தியாகராஜ பாகவதர்-பாட்டு. 26-12-51 புதன் கிழமை மாலை 5-30 மணிக்கு கே. பி. சுந்தராம்பாள் - பாட்டு. 27-12-51 வியாழக் கிழமை மாலை 5-30 மணிக்கு மதுரை மணி அய்யர் - பாட்டு. 28-12-51 வெள்ளிக் கிழமை மாலை 6 மணிக்கு டி. கே. எஸ். சகோதரர்கள் —ஔவையார் நாடகம். 29-12-51 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு ஸ்ரீ சரபேந்திர பூபால குறவஞ்சி — நாட்டிய நாடகம். 30-12-51 ஞாயிற்றுக்கிழமை மாலை 5-30 மணிக்கு எம். எஸ். சுப்புலட்சுமி - பாட்டு. 31-12-51 திங்கட் கிழமை மாலை 6 மணிக்கு குமாரி ராதா-பரதநாட்டியம், அபிநயம் எம். எஸ். சுப்புலட்சுமி பதம் பாடுவார்கள்.

## வள்ளுவர் தந்த அரசியல் நெறிமுறை

1-ம் பக்கத் தொடர்ச்சி

யுணர்ந்து இது நல்லது, நமக்கேற்றது. இது கொடியது, நமக்குத் தகாது, என மனத்தால் கருதுகின்றான். அதனால் வெளியுலகப் பொருள்களுக்கும் அவன் உள்ளத்திற்கும் ஓர்வகைத் தொடர்பு உண்டாகின்றது. இதனையே பற்றென்பர். இப் பற்றிலிருந்தும் காமம் (=ஆசை) என்னும் தலைசிறந்த தீய குணம் பிறந்தது. ஏனைய பல தீக் குணங்களையும் தொற்றுநோய் விளைக்கும் கிருமிகளைப் போலப் பிரபலமாகும்படிப் பெருக்குகின்றது. இவ்வுண்மையைத் தெளிய உணர்ந்த நம் முன்னோர்கள், "ஆசையறுமின்கள் ஆசையறுமின்கள் ஈசனோடாயினும் ஆசையறுமின்கள்" "ஆசைதனையடிமை கொண்டவனே தப்பாதுலகை - தனையடிமை கொண்டவனேதான்" என அறிவுறுத்தியிருக்கின்றார்கள்.

### விருப்பின் விடம்

காமம் ஒன்றே பல தீயகுணங்களைத் தோற்றுவிக்குமாறு யாங்ஙனம்? எனின், கோபம் காமத்தினின்றே தோன்றுகின்றது. அது எப்படி? காமம் விருப்ப வடிவம். சினமோ வெறுப்புமயம். ஒன்றுக்கொன்று முரண்படுவது. ஒரு பொருள் தன்னினத்தைப் பெருக்குமே யல்லாது எதிரிடையான பொருளைத் தோற்றுவிக்காது. இது நியமம், ஆதலால் காமத்தினின்று சினம் தோன்றுமென்பது பொருந்தாது என எளிதில் கூறுவாம். விரும்பப்படும் பொருள் பிறரால் கெடுக்கப்படுமானால் கோபமுண்டாகுமன்றோ? ஆகவே ஆசையின் மறுதலை கோபம் என்பது விளங்கிற்று. அவ்வாசைக்கு இடையூறு நேர்ந்தால் அதற்கு மாறுபாய கோபம் தோன்றியே தீரும். இதனாலும், ஆசையில்லாத பொருள் கேடுற்றால் கோபம் தோன்றாமையானும் ஆசையே சினத்திற்குக் காரணமென்றறியப்படுமென்க. இங்ஙனம் தோன்றும் கோபத்தால், செய்வதும், தவிர்வதும், பின் வரும் தீங்குகளை எண்ணுவதும் மறைக்கப்பட்டு உள்ளம் மூர்க்கமாக ஆவேசத்தை அடைகின்றது. அப்போது நினைவு தடுமாறி அறிவும் அழியத் தொடங்குகின்றது. அறிவு அழியப்பெற்றால் மனிதன் கெட்டுப்போகின்றான். இதுவே மேற்கூறிய நீதைச் சுலோகத்தின் கருத்தாம். திருவள்ளுவப் பெருமானுர் "காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றின் நாமங் கெடக் கெடும் நோய்" என்று காமம் வெகுளி மயக்கங்களைப் பிறப்பு முறையில் வைத்து எண்ணியிருப்பதும் கண்டு கருதற்குரியது.

### தீக்குணங்கள்

"குற்றங்கடிதல்" என்னும் தலைப்பில் ஆறுவகைத் தீக்குணங்கள் கூறப்படுகின்றன. அவை:-

(1) காமம் - வரையறையில்லாத ஆசை, (2) வெகுளி - கடுங்கோபம், (3) கடும்பற்றுள்ளம் - உலோபம், (4) மானம் - அளவிற்கு மீறிய தன் மதிப்பு, (5) உவகை - மிதமிஞ்சிய களிப்பு, (6) மதம் - தனக்கு நிகரில்லையென்னும் செருக்கு அல்லது சர்வம் என்பன. இவை தமிழில் உட்பகை எனவும் வடமொழியில் அரிஷ்ட வர்க்கம் - ஆறுவகைப் பகைக்கூட்டங்கள் எனவும் வழங்கப்படும்.

இவ் அதிகாரத்தின் முதல் இரு குறட்களிலும் இக்குணங்கள் மும்மூன்றாகப் பகுத்துக் கூறப்படுகின்றன.

(1) "செருக்குஞ் சினமுஞ் சிறுமையு மில்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து."

(2) "இவறலும் மாண்பிறந்த மானமும் மாணா
உவகையு மேத மிறைக்கு"

என்றதனை நோக்குக.

காமம் முதலாகக் கொண்டு முற்கூறிய முறைக்கு மாறாக முதற்குறளில், மதமும் சினமும் காமமும், அடுத்த குறட்பாவில் உலோபமும், மானமும், உவகையும் கூறப்பட்டதென்னையோ? எனின், இங்ஙனம் பிறழக் கூறல் செய்யுள் வழக்கென்றறிவித்தற்கென்க. அன்றியும், அரசன் தன் மேம்பாட்டையும் சயாதுடவல்களையும் நினைத்துச் செருக்குறுவதாலும், அதனால் சிறு தவறுகளையும் பொறாது கடுஞ்சினத்தால் பிறரைத் துன்புறுத்தலும், தன் படைவலியால் மற்றோர் தனக்கு அடங்கியவர்களெனக் கருதிப் பொருட் பெருக்கத்தின் பொருட்டுத் தாங்கமுடியாத வரிகளை விதந்துத் திரட்டப் பேராசை கொள்ளுதலும் கூடுமாதலால் இத் தீக்குணங்களை அறவே கடிந்தொழித்தல் வேண்டும். இக் குற்றங்கள் நீங்கப் பெறின், உலகில் புகழ் நாடோறும் ஓங்கி, அறநெறி வழி வந்த அவனது செல்வம் மேன் மேலும் பெருகுதலால் இன்ப மிக இனிது வாழ்வான் என அரசனது சிறப்பை வியந்து பாராட்டுகின்றார் எனக் கோடலுமாம். இரண்டாங் குறளில் உலோபமும் "அந்தணர், சான்றோர், அருந்தவத்தோர், தம் முன்னோர், தந்தை தாய் என்றிவரைத்தான் பணிந்தாலும்", தன் பெருமை குன்றுமென இறுமாக்கும் இழிவு கலந்த மானமும் தனக்கு உரிய சுற்றத்தார், நண்பர்கள், இவர்களால் சிபார்சு செய்யப்படும் பிறர் ஆகிய இவர்கட்கு அறநெறி கடந்தும், நடுநிலை தவறியும் உதவி புரியும் களிகண்ணோட்டத்திற்கு வழி காட்டும் களி பேருவகையும் ஆகிய இம் மூன்றும் பிறரால் கவனிக்கப்பட்டு நெறிகடந்து செல்லும் இவ் வரசன் மிகப்பொல்லான், தகுதியில்லான் என உள்ளூற வெறுப்புற்றக் கேடு சூழப்படுதலினால் இக் குற்றங்கள் தப்பாது அரசனுக்குத் தீங்கு விளைக்கும் என்று எச்சரிக்கின்றார். வெளிப்படும் பகைவரினும் உள்ளத்துள் குடிகொண்டு மறைந்து வாழும் வலிய இப் பகைகளே மிக்க கொடியோர் ஆதலால் முன்னர் இவர்களை வெல்வதே வேந்தர்கட்கு அரியதோர் வெற்றியாம் என்று குறிப்பதற்காகவே முற்பட இதனை மொழிந்தனர்போலும்.

குற்றம் செய்தோரைத் தண்டிக்கும் அரசர்கள், தாம் கடவுளின் பிரதிநிதிகளாயிருப்பதை உணர்ந்து தம்பால் சிறுகுற்றமும் சாராவண்ணம் மாசு அற்ற மனத்தினராயிருத்தல் வேண்டுமென்றும் குற்றங்களைக் கடியாவிட்டால் அவர்கள் பல தீங்குகளை அடைவார்களென்றும், எவ்வேளைகளில் குற்றம் நேருமாயினும் உடனே விலக்கிக்கொள்வதற்குரிய உபாயங்கள் இவை என்றுங்கூறி இவ்வதிகாரத்தை முடிவிக்கின்றார்.


# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

134,3670

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை,

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

**தினசரிப்பற்றுவரவு.**

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.**

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்.**

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

**கடன்.**

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14 20-11-46—20-11-49.



| திறமான | திறமான |
|---|---|
| தேக்க மரங்கள் | ருணிமார்க்ஓடுகள் |
| பல தினிசுகளிலும் | 13¾, 14 இஞ்சிகளிலும் |

வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்
ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.

Std. 2



L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

நல்லவாட்சிகள் கிடைக்குமிடம்

எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.



இலங்கையின்
மிகப்பெரிய
—நகை—
வியாபாரிகள்
=O=

தந்தி: "JEWELLERS"
போன்: 161.

கிளைத்தானம்:
63, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.


## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் இல. 7229

உரும்பிராய் அம்பலவாணர் சரவணமுத்து — வழக்காளி.

எதிராக

கொக்குவில் மேற்கு செல்லப்பா விசுவலிங்கம் — எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 7229ம் இலக்க வழக்கில் எனக்கு இடப்பட்ட கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் காணி 1952ம் ஆ தைமீ 19ம் உ (தமிழுக்குக் கர வருஷம் தை மீ 6ம் உ) சனிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை ரூபா 3906ம் ரூபா 2500 க்கு 1950ம்ஆ கார்த்திகை மீ 1ம் உ தொடக்கம் 1951ம்ஆ மாசி மீ 27ம் உ வரை 8 வீத வட்டியும் அதன் பின்பு முழுத் தொகைக்கும் 1951ம்ஆ மாசி மீ 27 - தொடக்கம் இறக்கும் வரை ஐந்துவீத வட்டியும் கோட்டுச்செலவும் அதாவது சென்ற செலவு ரூபா 151. 12½. இந்த வெலியாத்துச்செலவு ரூபா 3[illegible], 57½ பின் செலவு ரூபா 14 60.

காணிவிபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு மானிப்பாய் கோவிற்பற்று ஆனைக்கோட்டையிலிருக்கும் 'உமைக்காடு' கி. ப. 7. வீடும் அடக்கலையும், கிணறும், செய்பயிர் வான்பயிர்களும் பனைகளும், வடலிகளும், எல்லைகிழக்கு சிதம்பரநாதர். கவரத்தினத்துக்கும் பெண் சின்னம்மாவுக்குமுரிய வாதனம். வடக்கு ரோட்டும், மேற் சொல்லிய கிணற்றுக்குப் போக்குவரவுகளாக விடப்பட்டதாகிய இரண்டு குளி கொண்ட வைமொழுங்கையும், மேற்கும் தெற்கும் ஆறுமுகம் பெண் வள்ளியம்மைக்கும் பங்காளருக்குமுரிய வாதனம்

பொன்னம்பலம் அப்பையா
கொம்மிஷனர்

கொக்குவில்கிழக்கு,
12-12-1951.

.M 153 14—12—51.

Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond residing at 245; Navalar Road Jaffna. or and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai. Jaffna on Friday, December 14, 1951.